இவ்வரைபடங்கள் 18 - 5 - 15 நாளிட்ட
இவ்வலுவலக கடித எண் நிடு) 12102/15 நாளின்
விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு
தொழிற்சாலைகள் சட்டம் 1948-ன் கீழ் ஒப்புதல்
அளிக்கப்படுகின்றன.

தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர்
சென்னை

19/5

பதிவஞ்சல் மூலமாக.

தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம்

அனுப்புநர்
திரு. சி. ஞானசேகர பாபுராஜ், பி.டெக்
இயக்குநர்,
தொழிலக பாதுகாப்பு & சுகாதாரம்,
35 திரு.வி.க நெடுஞ்சாலை,
ராயப்பேட்டை,
சென்னை – 14.

பெறுநர்
உரிமையாளர்
சாலிமர் பெயிண்ட்ஸ் லிமிடெட்,
எண்–19, சின்னபுலியூர் கிராமம்,
சிறுபுழல்பேட்டை – அஞ்சல்
கும்மிடிப்பூண்டி தாலுகா,
திருவள்ளூர் மாவட்டம் – 601 201.

நிபு. (டி1)/12102/2015, நாள். 18.05.2015.

அய்யா,

பொருள்: தொழிற்சாலைகள் சட்டம் 1948 மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள் 1950 – வரைபடங்கள் – சாலிமர் பெயிண்ட்ஸ் லிமிடெட், எண்–19, சின்னபுலியூர் கிராமம், சிறுபுழல்பேட்டை – அஞ்சல் கும்மிடிப்பூண்டி தாலுகா, திருவள்ளூர் மாவட்டம் – 601 201. – ஆரம்ப ஒப்புதல் அளிக்கப்பட்டன. (பதிவு எண். URF)

பார்வை: தங்களின் படிவம் எண்.1 நாள் இல்லை (28.04.2015 அன்று பெறப்பட்டது)

*********

தங்களிடமிருந்து பெறப்பட்ட வரைபடங்கள் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்புதல் அளிக்கப்படுகின்றன..

1. மனை வரைபடத்தில் கூடுதல் உத்தேசிப்பு கட்டிட பகுதிகளை தனி நிறத்தில் குறிப்பிட்டு காட்ட வேண்டும்

2. இனி வருங்காலத்தில் விண்ணப்ப படிவத்தின் காலம் 8 இல் சரியான விபரங்கள் குறிப்பிட்டு தெரிவிக்க வேண்டும்

3. அனைத்து பொறிகளையும் அளவு விபரங்களுடன் நிறுவி காட்ட வேண்டும்.

4. ஏற்கனவேயுள்ள மற்றும் கூடுதல் பொறிகளை தனி நிறங்களில் குறிப்பிடப்பட வேண்டும்.

5. Canteen கூடம் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள் 65 & 66 இன் வரைமுறைகளின்படி அமைக்கப்பட வேண்டும் திருத்திய வரைபடம் அனுப்ப வேண்டும்

6. Rest Room / Locker Room தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதி 72 இன் வரைமுறைகளின்படி அமைக்க வேண்டும். திருத்திய வரைபடம் அனுப்ப வேண்டும்.

7. Hazardous Scrap Yard Shede இன் குறைந்தபட்ச கூரை உயரம் 3.5 மீட்டருக்கு குறையாமல் இருக்க வேண்டும்

8. ஆன்சைட் எமர்ஜென்சி பிளான் பதிவு பெறவும், மனை மதிப்பீட்டு குழுவின் ஒப்புதல் பெறவும் விண்ணப்பிக்க வேண்டும்.

9. இவ்வலுவலக கடித எண் நிமு.17753/11 நாள்: 10.06.11 இல் விதிக்கப்பட்ட நிபந்தனைகள் வ.எண். 7,10,12 & 13 இனை சரி செய்யப்பட வேண்டும்.

10. கதவு, சன்னல்களின் அளவு முறையே 1.2 x 2.0 மீட்டர் மற்றும் 0.91 x 1.52 மீட்டருக்கு குறையாமல் இருக்க வேண்டும்.

11. எல்லா கதவுகளும், சன்னல்களும் முழுவதும் வெளிப்புறமாய்த் திறக்குமாறு பொருத்தப்பட வேண்டும்.

12. எல்லா சன்னல்களின் அடிமட்டம் தரையிலிருந்து 1 மீட்டருக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

13. பொறிகளுக்கு இடையே குறைந்தது 60 செமீ இடைவெளி விட வேண்டும்.

14. தொழிற்சாலையில் உரிமம் தேவைப்பட்டால், திருத்தம் செய்ய விண்ணப்பிக்கவேண்டும்.

15. கட்டிட உறுதிச் சான்றிதழ் அளித்திட வேண்டும்.

16. ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்களின்படியே எல்லாக் கட்டிடங்களும் கட்டப்பட்டதாகச் சான்றிதழ் அளித்திட வேண்டும்.

17. ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்களின்படியே எல்லாப் பொறிகளும் அமைக்கப்பட்டதாகச் சான்றிதழ் அளித்திட வேண்டும்.

18. இவ்வரைபட ஒப்புதல் தொழிற்சாலை சட்ட விதிகளின்படி, கட்டிடங்கள் மற்றும் இயந்திரங்கள் நிறுவுவதற்கான/ நிறுவியதற்கான ஒப்புதல் மட்டுமே ஆகும்.

19. இத்தொழிற்சாலையில் 10ம் அதற்கும் மேற்பட்டத் தொழிலாளர்களை அமர்த்தி உற்பத்தியைத் தொடங்கும் முன்னர் தொழிற்சாலையைப் பதிவு செய்யவும், உரிமம் பெறவும் விண்ணப்பிக்க வேண்டும்.

20. தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 2cb ன் அனைத்து பாதுகாப்பு முறைகளும் கடைபிடிக்கப்பட வேண்டும்.

21. இத்தொழிற்சாலையில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் மற்றும் காற்றமாசுக் கழிவுப் பொருட்களையும், தமிழ்நாடு சுற்றுப்புறச் சூழ்நிலை மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் வரைமுறைக்கிணங்க அப்புறப்படுத்துவதாகச் சான்றிதழ் பெறப்பட வேண்டும்.

22. தொழிற்சாலைகள் சட்டப் பிரிவு 87 மற்றும் 1950 தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகளின் விதி எண்.95-ன் அட்டவணை- XVI,& XXXI- ன் அனைத்து பாதுகாப்பு முறைகளும் கடைபிடிக்கப்பட வேண்டும்.

ஒரு தொகுதி ஒப்புதல் அளித்த வரைபடங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

இணைப்பு: ஒரு தொகுதி வரைபடங்கள்

(எண்ணிக்கை --9)

19/5/15

தொழிலக பாதுகாப்பு & சுகாதார இயக்குநருக்காக,

சென்னை-14.

19/5

நகல் -

தொழிலக பாதுகாப்பு & சுகாதார கூடுதல் இயக்குநர், சென்னை

தொழிலக பாதுகாப்பு & சுகாதார இணை இயக்குநர், 1ம் கோட்டம் சென்னை

(ஒரு தொகுதி வரைபடங்கள் மற்றும் படிவம் எண்1 - ன் ஒரு நகல் இணைக்கப்பட்டுள்ளது)

தொழிலக பாதுகாப்பு & சுகாதார துணை இயக்குநர், 2ம் வட்டம் சென்னை